**வில்கமுவ பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வில்கமுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வில்கமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு**

இந்நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான

கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் 1.6.1 இன் (அ), (ஆ), (இ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 323,450 ஆன நூலகப் புத்தகங்கள் மற்றும் ரூபா 2,600,000 ஆன கெப்வண்டி என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் நிர்மாணத்திற்காக செலவழிக்கப்பட்ட ரூபா 633,000 மூலதனமாகப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) 2024 ஆம் ஆண்டின் செலவினமாக காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 216,925 கூட்டுப் பெறுமதியான 04 செலவின தலைப்புகள் மீளாய்வாண்டில் அட்டுறு செலவினமான கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) மீனாயவாண்டியன் போது 02 செலவின விடயங்களின் கீழ் ரூபா 3,091,449 ஆன செலவினம் வருமானச் செலவின கணக்கிற்கு ரூபா 3,270,674 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 179,225 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் போது களஞ்சிய முற்பண நானாவித கடன்கொடுத்தோர் ரூபா 296,750 ஆக இருந்த போதும் அது ரூபா 514,555 எனக் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 217,805 கூடுதலாக கணக்கு செய்யப்பட்டிருந்தது | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறை சொத்துகளில் ரூபா 1,817,316 ஆன நிர்மாண கடன்பட்டோர் செலவு மீதி ஒன்றாகவும் நடைமுறை பொறுப்பினுள் மொத்தம் ரூபா 2,810,937 ஆன கடன் கொடுத்தோர் மீதி ஒன்றாக நிர்மாண வைப்புக்கள் ரூபா 67,596 நடைமுறை பொறுப்பினுள வரவு மீதி ஒன்றாக தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (எ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அலுவலக இராஜாங்க அமைச்சின் புற நெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,255,200 ஆன 150 நீர் உபகரணத் தொகுதிகளில் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதும் அது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | முன்னைய ஆண்டின் போது இருப்பு பெறுவனவு வழங்கள் இருப்பு முற்பணக் கணக்கில் பதிவு செய்யப்படாமல் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கில் பதிவு செய்தமையால் அக்கணக்கு ரூபா 291,483 கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,645,788 ஆன மின் உபகரணங்கள் இருப்பு தளபாடங்கள் மற்றும் பொருக்திகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட தவறுகளை திருத்தம் செய்யும் போது அப்பெறுமதி மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தினால் பங்களிக்கும் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் மற்றும் பொது களஞ்சிய கணக்குக்கு வரவு வைத்த | - மேற்படி - | - மேற்படி - |

காரணத்தினால் அவ்விரண்டு கணக்குகளும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்து கணக்கு மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கிற்கு இடையே ரூபா 4.713,366 ஆன இணக்கமின்மை காணப்பட்டது | 2024 இறுதி கணக்கினைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்ட 18 கணக்கு விடயங்களின் மீதிகளுடன் அதற்குரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்களுடன் ஒப்பிடும் போது ரூபா 33,995,559 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கவில்லை. | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |

**1.6.3 தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக இருந்து வரும் ரூபா 1,501,545 ஆன தொங்கல் கணக்கின் மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தொங்கல் கணக்கின் மீதியை இனங் கண்டு தீர்வு செய்யப்பட வேண்டும் |

**1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 28,701,488 ஆன 06 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 935 627 ஆன பொறுப்பு | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளுக்கு உரிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக திருப்திகரமாக சான்றுறுதிபடுத்த முடியாது இருந்தது | | வேண்டும் |
| (ஆ) | சபையில் சேவையில் இல்லாத 23 வருடங்களாக அறவிடப்பட வேண்டிய மூன்று உத்தியோ கத்தர்களுக்குரிய ரூபா 79,624 ஆன கடன் மீதிகள் தொடர்பான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை. | கடன் மீதிகளை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வர்த்தமானி | | | |
| | 2022 ஜனவரி 24 ஆம் திகதிய 2264/18 ஆம் இலக்க மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வர்த்தமானி | செல்லுபடியான காலம் கடந்த 06 வியாபார நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொண்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| I | நி.பி 104 (3) மற்றும் (4) | ரூ வீதி விளக்குகள் தொகுதி களுக்குரிய பா 162,700 கூட்டு | இறுதி அறிக்கையின் கட்டளை பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை | நி.பி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெறுமதியான மின் உப பாகங்கள் காணாமல் போனமை மற்றும் சுடலைச் சாலை வருமானம் பிரதேச சபைக்கு கையளிக்காமை தொடர்பாக பரிசோதனை சபை நியமிக்கப்பட்ட போதும் பரிசோதனை யொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படுவதாக | வேண்டும் |
| II | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நி.பி 371(2) (ஆ) | உப கட்டுநிதி செயற்பாடு முடிந்தவுடன் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 09 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 01 மாதம் முதல் மாதங்கள் வரையான கால பகுதியில் தீர்வு செய்வதில் தாமதம் காணப்பட்டதுடன் அதற்காக 67,785 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான குறைபாடுகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு பார்த்துக் கொள்வதாக | நி.பி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

(ஆ) சுற்றறிக்கைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| I | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க திறைசேரி முகாமைத்துவ சுற்றறிக்கை | பிரதேச சபைக்கு சொந்தமான 02 வாகனங்களின் உரித்து சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதாக வாகனமொன்று தொடர்பாக நீதிமன்ற நடடிக்கை மேற்கொள்ளப்படுவதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| II | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான ஓட்ட நிலைமையிலுள்ள 04 வாகனங்கள் 01 முதுல் 07 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை | எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள் வதற்கு நடவடிக்கைகள் எடுக்க உள்ளதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,793,507ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 3,575,850 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,470,000 | 2,424,965 | 2,323,668 | 889,525 | 680,000 | 709,688 | 1,151,420 | 788,227 |
| (ii) | வாடகை | 6,238,200 | 1,835,810 | 1,718,700 | 1,050,679 | 1,100,000 | 985,000 | 803,000 | 933,569 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,121,000 | 856,789 | 856,789 | - | 1,000,000 | 879,845 | 1,557,760 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 44,629,020 | 8,688,832 | 12,053,653 | 12,032,138 | 11,510,000 | 9,888,300 | 10,027,328 | 15,396,959 |
| | | 54,458,220 | 13,806,396 | 16,952,810 | 13,972,342 | 14,290,000 | 12,462,833 | 13,539,508 | 17,118,755 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| (i) மீளாய்வாண்டில் நீர்க் கட்டணங்கள் ரூபா 2,331,755 ரூபா 3பட்டியிலிடப்பட்டிருந்த போதும் ஆண்டில் ரூபா 782,179 அதாவது பட்டியலிடலில் 33 சதவீதத்திற்கு குறைந்த அளவு அறவிடப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்சைக எடுப்பதாக கொள்ளப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் வாரச் சந்தை நிலுவை வருமானம் ரூபா 3,754,498 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,623,345 தொகை முன்னைய ஆண்டுகளுக்குரிய பெறவேண்டிய வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்கு நடவடிக்கை எடுப்பதாக | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக |
| (ஆ) நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணங்களும் | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,136,418 ஆக இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபை அதிகார பிரதேசத்தில் விளம்பர அறிவித்த தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் 04 விளம்பர இடங்களுக்குரிய 320 சதுர அடிகளுக்காக ஒரு சதுர | 2024 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிக்கு ரூபா 50 வீதம் ரூபா 16,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 664,474 ஆன கடன் மீதி மற்றும் இடமாற்றம் பெற்றுச் வந்திருந்த ஒருவரிடம் இருந்து ரூபா 237,039 ஆன கடன் தொகை இணக்கம் செய்யப்பட்டு வில்கமுவி வலய கல்வி அலுவலத்திடமிருந்து சபைக்கு ரூபா 427,435 ஆன காசோலையொன்று மீளாய் வாண்டின் ஒக்டோபர் 15 ஆம் திகதி கிடைத்திருந்த போதும் கடன் மீதிகளுக்குரியதாக இதனை எதிரீடு செய்யாமல் அதனை பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது | கருத்து தெரிவிக்கவில்லை | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை பயன்படுத்தும் 54 காணிகளின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்வதாக. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வில்கமுவ பிரதேச சபையில் ரூபா 10,620,344 ஆன செயற்பாட்டு நிலைமையில் காணப்படும் 03 வாகனங்கள் 3 ஆண்டு காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் | திருத்தம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக | திருத்தி பயன்பாட்டுக்கு எடுக்கப்பட வேண்டும். |

விளைவற்று காணப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வில்கமுவ பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா 785,000 ஆன 4 வாகனங்கள் 3 ஆண்டுகள் முதல் 18 ஆண்டு காலம் வரை ஓட்ட நிலைமையில் இல்லாமல் மற்றும் திருத்தங்கள் மேற் கொள்ளப்படாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தன. | பதிவு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏல விற்பனைக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு கை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் சுடலைச் சாலை ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் முறையான எரிவாயு எரிவு பரிசோதனை மேற்கொள்ளாமல் இருந்ததுடன் அதற்கு இணையான நிறுவனங்களில் சடலம் ஒன்றை தகனம் செய்வதற்கு 12 கிலோ கிராம் எரிவாயு செலவாகிய போதும் இந்த சபையில் சடலம் ஒன்றைத் தகனம் செய்வதற்கு 17.37 கிலோகிராம் எரிவாயு செலவிடுவது காரணமாக கடந்த 05 ஆண்டுகளில் 37.5 கிலோகிராம் அளவிலான 29 எரிவாயு கொள்கலன்கள் அதாவது 1992 கிலோகிராம் எரிவாயு கூடுதலாக பயன்படுத்தப்பட்டோ அல்லது முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டு இருந்தது அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் 37.5 தசம் கிலோகிராம் எரிவாயு கொள்கலனை நிரப்புவதற்கு செலவிட்ட ரூபா 16,260 ஆன விலையின் பிரகாரம் ரூபா 471,540 ஆன நட்டமொன்று சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது. | சிக்கலை தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | முறையான பரிசோதனை ஒன்றின் பின்னர் நட்டங்களை வேறாக உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபையின் 09 பதவிகளில் 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உயர்மட்ட முகாமைத்துவத்திற்கு அறிவித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் |

:

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் மதிப்பிடப்பட்டிருந்த வீதவரி மற்றம் குத்தகை வருமானம் ரூபா 240,000 ஆக இருந்த போதிலும் ஆண்டிற்குரிய பட்டியலிடல் ரூபா 2,290,730 ஆக இருந்தமையால் முறையான ஆய்வொன்றும் கவனம் இல்லாமலும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான வருமானமொன்றை எதிர்காலத்தில் எதிர்பார்ப்பதாக | நடைமுறைச் சாத்தியமாக பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 <u>திண்மக் கழிவுப்பொருள் டுகாமைத்துவம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சுபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1980 இன. 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 2017 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய LDB4/8 (XII) ஆம் இலக்க திருதத்தின் பிரகாரம் எந்த ஒரு நபரும் பிளாஸ்டிக் அடங்கிய பொருட்களை அல்லது இலகுவில் எரியும் ஏதாவது பொருட்களை வெளியில் எரித்தல் எரிப்பதற்கு திட்டமிடல் அல்லது அனுமதி அளித்தல் செய்யக்கூடாது என | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவிக்கப்பட்டு இருந்த போதும் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் கணிப்பீட்டிற்கு உட்பட்ட இடங்களில் கழிவுகள் எரிக்கப்பட்டு இருந்தன. | | |
| (ஆ) | நாமினி ஓய சுடலைச் சாலையில் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட உடைந்த பொருட்கள் மற்றும் மற்றும் ஏனைய பொருட்களை முறையாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக சுடலை சாலையின் வளவில் அப்பொருள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கழிவு பொருட்களை வெளியேற்றுவதற்கு முறையான நடைமுறை ஒன்று பின்பற்றப்பட வேவ்டும். |

## 4.3 <u>நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பிரதேச சபையின் மூலம் முறையான விதத்தில் நிலையான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |